

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (17.07.2025) திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குவது தொடர்பாகவும், பக்தர்கள் எளிதில் விரைவாக சுவாமி தரிசனம் செய்திட மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு செய்தனர். உடன் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் எம்.சுதாகர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கோவை ஆனைமலை ஆழியாறில் சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 19 -

**கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், வால்பாறை ஆழியார் சாலை, சின்னார்பதியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனை மலை வட்டம், ஆழியார் கிராமம், நவமலைபதியைச் சேர்ந்த 22 நபர்கள் 17.7.2025 அன்று காலை டாடாஏஸ் வாகனத்தில் வேலை நிமித்தமாக ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், வால்பாறை ஆழியார் சாலை, சின்னார்பதி என்னுமிடத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மேற்படி வாகனம் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த திருமதி.ராணி (வயது 45) க/பெ.மணிகண்டன் என்பவர் சம்பவ இடத்திலும், திலகராஜ் (வயது 40) த/பெ.கருப்பன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும், சஞ்சய்குமார் (வயது 20) என்பவர் மேல்சிகிச்சைக்காக கோயம் புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் 19 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தர விட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உற வினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரி வித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர் களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காய மடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

### திருவண்ணாமலை – அருணாசலேசுவரர் திருக்கோயிலில்

# பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தனர்!

திருவண்ணாமலை, ஜூலை 19-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நேற்று முன்தினம் (17.07.2025) திரு வண்ணா மலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அருணாசலேசுவ ரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான அடிப் படை வசதிகளை மேம்ப டுத்தி வழங்கு வது தொடர்பா கவும், பக்தர்கள் எளிதில் விரைவாக சுவாமி தரிசனம் செய்திட மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் கலந்தாய்வுக் கூட்டம் நடை பெற்றது.

**அமைச்சர் எ.வ.வேலு**

இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

திருவண்ணாமலை அரு ணாச்சலேசுவரர் திருக்கோயி லுக்கு வெளி மாநிலங்கள் மற் றும் வெளி மாநிலங்களிலி ருந்து அதிகளவில் பக்தர்கள் வருகை தருகின்றனர். அதற்கு தகுந்தாற்போல அனைத்து வசதிகளும் தொடர்ந்து மேம் படுத்தப்பட்டு வருகிறது. இராஜகோபுரம் வழியாக அனுமதிக்கப்படும் பொது தரி சன வரிசை முறைப்படுத்தப் படுவதோடு கூடுதலாக கியூ லைன் வரிசையினை ஏற்ப டுத்த வேண்டும். உள்ளூர் பக் தர்களுக்காக சுவாமி தரிசன நேரம் ஒதுக்கிட வேண்டும். கட்டண தரிசன வசதிகளை முறைப்ப டுத்தி, இடைத்தர கர்கள் தலையீடு இல்லாமல் திருக்கோயில் நிர்வாகம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இத்திருக்கோயிலுக்கு அதி களவில் பக்தர்கள் வருகை தருவதால் நெரிசலை தவிர்க் கும் வகையில் பேகோபுரம் வழியாக பக்தர்கள் வெளியே செல்ல அனுமதிக்க வேண் டும். நவீன இயந்திரங்களை கொண்டு பக்தர்களின் எண் ணிக்கையை கணக்கீடு செய்ய லாம்.

திருக்கோயிலில் பக்தர்கள் தரிசனத்திற்காக நீண்ட நேரம் வரிசையில் நிற்பதை தவிர்க் கும் வகையில் அபிசேகம் குறித்த நேர விபரங்களை மின்னணு திரையின் மூலம் அறிவிப்பு செய்யவேண்டும். திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் உரிய அடை யாள அட்டை வழங்கப்படுவ தோடு, அவர்களை ஒரே இடத்தில் பணியமர்த்தாமல் சுழற்சி முறையில் பணிய மர்த்த வேண்டும்.

அதற்காக மேற்பார்வை விழிப்புணர்வு குழு ஒன்றை அமைக்கலாம். கிரிவலப் பாதையில் எவ்வித தவறுக ளும் நடைபெறா வண்ணம் காவல் துறையினர் கூடுதல் கவனம் செலுத்திட வேண் டும். திருக்கோயிலுக்கென்று தனியாக அறிவிக்கப்பட்ட காவல் நிலையம் விரைவில் பயன்பாட்டுக்கு வரும். மாட வீதிகளில் அமைந்துள்ள உள் ளூர் மக்களின் வாகனங்க ளுக்கு அனுமதி அடையாள அட்டை மாவட்ட நிர்வா கத் தின் சார்பில் வழங்கப்பபட் டுள்ளது. திருவண்ணாமலை யில் அமைந்துள்ள திருக்கோ யிலுக்கு வருகை தரும் பக்தர் களுக்கு தேவையான அடிப் படை வசதிகளை செய்து கொடுக்க அனைத்து துறையி னரும் ஒருங்கிணைந்து பணி யாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

அமைச்சர் பி.கே.சேகர பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவண்ணாமலை அரு ணாசலேசுவரர் திருக்கோயி லுக்கு திருவிழா காலங்கள் மட்டுமன்றி அனைத்து நாட் களிலும் வருகை தரும் பக்தர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை யாரும் மறுக்க முடியாது. இந்த திருக்கோயில் அமைந் துள்ள பகுதியானது பெரும ளவு மக்கள் வசிக்கின்ற பகுதி யாக இருப்பதாலும், பௌ ர்ணமி நாட்களில் பெருமளவு பக்தர்கள் கிரிவலம் வருவதா லும், நெருக்கடி நிறைந்த சூழல் ஏற்பட்டு இருக்கின் றது. அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ் நாடு முதலமைச்சர் இந்த மாவட்டத்தின் அமைச்சர் அவர்களையும், இந்து சமய அறநிலையத்துறை துறை அமைச்சரான என்னையும் ஒருங்கிணைந்து வளர்ச்சித் திட்டப் பணிகளை வகுத்திட வேண்டும் என உத்தரவிட் டார்கள். அதற்கிணங்க திருக்கோயிலில் பல்வேறு வளர்ச்சி பணிகளும், பக்தர்க ளுக்கு தேவையான அடிப் படை வசதிகளும், கிரிவல பாதையில் தேவைப்படுகின்ற உள்கட்டமைப்பு வசதிகளும் அறக்கட்டளைகளின் சார்பி லும், உபயதாரர்கள் சார்பி லும் பல்வேறு பணிகளை கோடிக்கணக்கான ரூபாய் செலவில் மேற்கொண்டு வரு கின்றோம்.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் துறையின் அமைச்சர் என்ற முறையில் நானும், துறை செயலாளர், ஆணையாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் பல்வேறு துறையின் அலுவலர் களோடு ஒருங்கிணைந்து திருக்கோயிலின் வளர்ச்சிக் கும், பக்தர்களுக்கான வசதி களை மேம்படுத்துதல் தொடர்பாக பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்த ஆலோசனை மேற்கொண் டோம். அதன்படி திருவண் ணாமலை அருணாச்சலேசுவ ரர் திருக்கோயிலில் பிரேக் தரிசனத்தை கொண்டு வருவ தற்கு உத்தேசித்து இருக்கின் றோம். மூத்த அர்ச்சகர் ரமேஷ் குருக்கள் மற்றவர்க ளோடு இணைந்து தரிசன நேரத்தை நீட்டிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள் ளார்.

**பிரேக் தரிசனம்!**

சுவாமி தரிசனத்திற்கு வரு கின்ற பக்தர்களின் கூட்டத்தி ற்கு ஏற்றாற்போல் தரிசன நேரத்தை அதிகமாக்குவதற்கு உத்தேசித்து இருக்கின்றோம். நிச்சயமாக அர்ச்சகர்களும் அதற்கு ஒத்துழைப்பார்கள். அதேபோல தரிசன நேரத்தை கூட்டுகின்ற அதே நேரத்தில் பிரேக் தரிசனத்தை கொண்டு வரலாம் என்று அமைச்சர் ஆலோசனை வழங்கி இருக் கின்றார். 50 ரூபாய் கட்ட ணத்தை 100 ரூபாயாக உயர்த் துவது என்று கூட்டத்தில் முடிவெடுத்துள்ளோம். அந்த நூறு ரூபாய் கட்டணத்தை கூட சமீபத்தில் திருச்செ ந்தூ ரில் ஏற்படுத்தியதை போல் கியூ லைன் வரிசை திட்டத்தை ஏற்படுத்த பணிகள் நடை பெற்று வருகின்றன. பெருந் திட்ட வரைவின் மூலம் ஏற்ப டுத்தப்பட்டு வரும் இந்த பக்தர்கள் காத்திருப்பு கூட மானது ரூ. 8 கோடி மதிப்பீட் டில் சுமார் 2,000 பக்தர்கள் அமர்ந்திடும் வகையில் இருக் கைகள், மின்விசிறிகள், குடி நீர்வசதி, கழிப்பிட வசதி போன்றவற்றோடு, திருக்கோ யில்களில் நடைபெறுகின்ற அபிசேகங்கள் மற்றும் உற்ச வங்களை தொலைக்காட்சி யில் அமர்ந்த இடத்தில் பார்க் கின்ற வசதிகளோடு அமைக்கப் பட்டு வருகின்றது.

திருக்கோயிலில் பக்தர்கள் வழிபாடு செய்கின்ற இடத் தினை முழுமையான தூய் மைப் பகுதியாக்குவதோடு, விளக்கு ஏற்றுவதற்கு வேறு இரண்டு இடங்களை ஒதுக்கி தந்து, அந்த இடங்களை சுத் தமாக பராமரிப்பதற்காக கூடு தல் பணியாளர்களை நியமிக் கவும் அறிவுரை வழங்கப்ப ட்டுள்ளது. பொது தரிசன வரி சையினுடைய நீளத்தை அதி கப்படுத்த திட்டமிட்டு, அதற் குண்டான பணிகளையும் மேற்கொள்ள இருக்கின் றோம். திருக்கோயிலில் அபி ஷேகம் நடக்கின்ற நேரங்க ளில் தரிசனத்திற்கு தாமதம் ஏற்படுகின்ற போது வெளி மாநிலங்களில் இருந்து வரு கின்ற பக்தர்கள் புரிந்து கொள்வதற்காக அனைத்து இடங்களிலும் ஒலிபெருக்கி யின் வாயிலாக அறிவிப்பு செய்யும் வகையில் பொது அறிவிப்பு அமைப்பு ஏற்படுத் தப்படும். திருக்கோயிலை சுற்றி அதிக இடங்களில் எல்.இ.டி. திரைகள் அமைக்க வும், அதில் தினந்தோறும் நடக்கின்ற அபிஷேகங்கள், இதர பூசைகள் போன்றவற்றை மக்கள் எங்கிருந்தாலும் பார்க் கின்ற அளவிற்கு வசதிகளை ஏற்படுத்த உள்ளோம்.

பக்தர்கள் ஒரு சில நேரங்க ளில் தனியார் விடுதிகளில் அதிக கட்டணம் செலுத்தி, தங்கும் சூழ்நிலை ஏற்படு வதை கருத்தில் கொண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நிலுவையில் இருந்த திருவண்ணாமலை பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி, திறந்து தற்போது பக்தர்கள் பயன்பாட்டிற்கு வழங்கி இருக்கின்றோம். மேலும், கூடுதலாக ரூ. 64 கோடி மதிப் பீட்டில் மற்றொரு பக்தர்கள் தங்கும் விடுதியை கட்டுவ தற்கு திட்டமிடப்பட்டு அதற் கான ஒப்பந்தங்கள் நிறைவு பெற்றிருக்கின்றது. கூடிய விரைவில் கட்டுமானப் பணி கள் தொடங்கப்படும். பக்தர் களுக்கு தேவையான வசதி களை எந்தளவிற்கு அதிகரிக்க முடியுமோ, அந்த அளவிற்கு அதிகப்படுத்தி, பணிகளை விரைந்து மேற்கொள்வோம். மாவட்ட அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் இன் னும் 20 ஆண்டுகளுக்கு தேவையான கூடுதல் வசதி களை இப்போதே திட்டமிட ப்பட்டு அதற்கேற்றாற்போல் பெருந்திட்ட வரைவு ஒன்று 200 கோடி ரூபாய் மதிப்பீட் டில் தீட்டப்பட்டு வருகிறது. அதனை செயல்படுத்துவதற் குண்டான அனைத்து சாத்தி யக்கூறுகளையும் ஆராய்ந்து அதற்கான பணிகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் தொ டங்குவதற்கு திட்டமிட்டு கொண்டிருக்கிறோம்.

**உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு வழிகாட்டல்!**

அறங்காவலர் குழுக்களை பொறுத்த அளவில் மாண் பமை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு பல்வேறு வழிகாட்டு தல்களை வழங்கி இருக்கின் றது. இத்திருக்கோயில் அறங் காவலர் குழுவின் காலம் தற்போது தான் முடிவு பெற் றுள்ளது கடந்த முறை அறங் காவலர் குழு நியமிக்கப்பட்ட தில் சில சர்ச்சைகள் எழுந்து நீதிமன்றம் வரையில் சென்ற காரணத்தினால் இந்த முறை வருகின்ற அனைத்து மனுக்க ளையும் பரிசீலித்து நீதிமன் றம் தெரிவித்துள்ள வழிமு றைகளுக்குட்டு விரைவாக இத்திருக்கோயிலின் அறங்கா வலர் குழு அமைக்கப்படும். இந்த அறங்காவலர் குழு நிய மனத்திற்கான தாமதத்தினால் நிர்வாகம் எந்த வகையிலும் தடைபடாது.

யாதும் ஊரே, யாவரும் கேளிர். பக்தர்களை உள்ளூர் மக்கள், வெளியூர் மக்கள் என்று பிரிக்காதீர்கள். இங் குள்ள மக்கள் நல்ல உணர் வோடு, ஒற்றுமையோடு, சுமூ கமாக இருக்கின்றார்கள். உள்ளூர் மக்கள் எப்போது தரிசனத்திற்கு வந்தாலும் அனுமதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு எவ்வித இடை யூறும் இல்லாது பார்த்துக் கொள்ளவேண்டியது நிர்வா கம் மற்றும் அர்ச்சகர்களின் பொறுப்பாகும். ஆகவே நல்ல முறையில் தரிசனம் செய்வதற்கு எந்த வித தடை யையும் ஏற்படுத்த மாட் டோம். விடுமுறை நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதனால் அதனை ஒழுங் குபடுத்தும் வகையிலும், வெளிநாடு மற்றும் வெளி நாட்டு பக்தர்களின் தரிசனத் திற்கு உதவிடும் வகையிலும் துறையின் சார்பில் மக்கள் தொடர்பு அலுவலரை நியம னம் செய்திட இந்த மாவட் டத்தின் அமைச்சர் அறிவுறுத் தியிருக்கின்றார். மேலும் இத்திருக்கோயிலில் துணை ஆணையர் நிலையில் ஒரு கூடு தல் பணியிடம் உருவாக்கப் படும். திருவண்ணாமலை திருக்கோயிலில் காலிப் பணி யிடங்கள் அனைத்தும் முழு மையாக நிரப்பிட நட வடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் கூடுத லாக பணியிடங்கள் தேவைப் பட்டாலும் முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று நிரப்பப்படும். தற் போது பக்தர்களுக்கு ஏற்படு கின்ற சிறிய அளவிலான சிர மங்களையும் இன்றும் 3 மாதங்களில் முழுமையாக களைவோம். ஆலயத் தூய்மை, பிரகாரத் தூய்மை, இறையன் பர்களின் மனத்தூய்மை அனைத்தையும் இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும்.

திருக்கோயில் வளாகத்திற் குள் செல்போன்களை கொண்டு செல்ல தடை விதிப்பது குறித்து ஆலோசித்துக் கொண் டிருக்கின்றோம். திருவண் ணாமலை திருக்கோயிலுக்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து அதிக ளவில் பக்தர்கள் வருகை தரு கின்றார்கள். திருக்கோயிலோ பரந்து விரிந்துள்ளது. செல் போனுக்கு தடை விதித்தால் யாராவது ஒருவர் தவறாக வழிமாறி சென்று விட்டாலும் கண்டுபிடிப்பதற்கு அதிக சிரமம் ஏற்படும். எனவே அனைத்து சாதக, பாதகங் களை ஆராய்ந்து, இந்த மாவட்ட அமைச்சர் அவர்க ளுடன் கலந்து பேசி இன்னும் 10 நாட்களில் இதுகுறித்து முடிவெடுக்கப்படும்.

**எங்கும் தமிழ் – எதிலும் தமிழ் எப்போதும் தமிழ்!**

கேரள மாநிலத்தில் அமைந் துள்ள சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலில் அங்குள்ள 18 படிகளில் 18 தேவதைகள் குடிகொண்டு ள்ளதாக ஐதீ கம். அந்த 18 படிகளின் முகப் பில் தமிழில் சரணம் ஐயப்பா என்று குறிப்பிடப்பட்டிருக் கும், அதனால் சபரிமலை தமிழ்நாடாக மாறிவிட்டது என்பதல்ல அர்த்தம். எந்த பக் தர்கள் அதிக அளவில் கூடுகி றார்களோ அறிந்து கொள்வ தற்காக அந்தந்த மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. அதைப்போலதான் திருவண் ணாமலை யிலும் குறிப்பிடப் பட்டு ள்ளது. இதில் உள்நோக் கமில்லை. எங்கும் தமிழ், எதி லும் தமிழ், எப்போதும் தமிழ் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் எங்கள் முதலமைச்சர் அவர்களின் கொள்கையாகும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் பெருமக்கள் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்க ளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறி யாளர்களுக்கு அறிவுரை களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை கூடுதல் தலை மைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், மாவட்ட காவல் கண்காணிப் பாளர் மருத்துவர் எம்.சுதா கர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் சு.மோகனசு ந்தரம், ஜெ.பரணிதரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் இரா.மணி மற்றும் அனைத் துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் –

# குறிஞ்சிப்பாடி அருகே காலணித் தொழில் பூங்கா அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சருக்கு நன்றி!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், ஜூலை 19 -

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,17.07.2025, வியா ழக் கிழமை, மாலை 4 மணியளவில், காணொளி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக்குழு செய லாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற் றது.

கோ.ஐயப்பன் எம். எல்.ஏ., தொகுதி பார்வை யாளர்கள் ஏ.அங்கையற்க ன்னி, விஜயன்ராமகிருஷ் ணன், சுவை.சுரேஷ், எம். எம்.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளா ளர் எம்.ஆர்.கே.பி.கதிர வன், ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமன எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், 14-07-2025 மற்றும் 15-07-2025 அன்று கடலூர் மாவட் டம், சிதம்பரத்தில், மாண் புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி அவர்கள் கலந்துக் கொண்டு, ஐயா எல்.இளையபெருமாள் நாற்றாண்டு அரங்கம் மற் றும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய் யும் வகையில்

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தனை துவக்கி வைத்ததற்கும், கடலூர் மாவடம் குறிஞ்சிப்பாடி அருகே கொடுக்கன்பா ளையத்தில் 150 ஏக்கர் பரப்பில் தோல் அல்லாத காலணி மற்றும் காலணிக ளுக்கான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற் பூங்கா, ஸ்ரீமுஷ்ணம் காவிரி டெல்டா பகுதி யாக அறிவிக்கப்படும் உள் ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்க ளுக்கு கடலூர. கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நன்றி தெரிவித்து தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் கிழக்கு மாவட் டத்தில் 5 சட்டமன்ற தொகுதி, 1284 பூத்களில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர் களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை, கூடுதல் வேகத்துடன் சேர்த்திடல் வேண்டும். கடலீர் கிழக்கு மாவட்டத் தில் 430-ககும் மேற்பட்ட இடங்களில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ளும் பொதுமக்களுக்கு கழக நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து பணி யாற்றி உதவிடுமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறது என்பது உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் கள் ஆர்.சக்திவேல், சுதா சம்பத், ஒன்றிய செயலா ளர்கள்: அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க. ஆனந்தன், ஆர்.நாராயண சாமி, கே.ஆர்.ராயர், பா.திருமாவளவன், பி.சுந் தரபாண்டியன், தெ.காசி ராஜன், பி.சுப்பிரமணி யன், ஆர்.விஜயசுந்தரம், த.சங்கர்,ம.சோழன், வி. கோவிந்தசாமி, கே.நடரா ஜன், எம்.மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், டி.திரு மூர்த்தி, எஸ்.செந்தில்கு மார், கே.ஆர்.கோவிந்த ராஜ், ஆர்.ராஜேந்திரன், ஏ.எம்.மதியழகன், வெற்றி வேலு, வி.பி.பாலு, கே.ஆர்.தனஞ்செயன், கே.மகேஷ், த.ஜெயபாண் டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ். ராஜா, கடலூர் பகுதி செய லாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ். சலீம், மு.இளையராஜா, நகர கழக செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார், த.தமிழ்ச்செல்வன், வட லூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள்- வ.ஞான சேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர் கள்: கே.பி.ஆர்.பாலமுரு கன், த.ஜேம்ஸ்.விஜய ராகவன், இரா.தமிழரசன், ச. கல்யாணசுந்த ரம், என். டி.கணேசன், மஞ்சு, பா. கோதண்ட பாணி, பேரூர் செயலாளர்கள்: காட்டு மன்னார்கோவில் எஸ். கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியா தோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வ குமார், சேத்தியா தோப்பு ப.மனோகரன், அண்ணா மலை நகர் க.பழனி, மாவட்ட கழக பார்வை யாளர்கள் டி.பழனிசாமி, ஜி.சின்னமணி,பி.வெங்க டாஜலபதி, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளை ஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அப்பு ஆர்.சந் தியநாராயணன், பொறி யாளர் அணி அப்பு.சந்திர சேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மக ளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்க றிஞர் அணி பி.அருள் ஜோதி, மாநகர வழக்கறி ஞர் அணி பாபு, ஆதிதிரா விடர் நல்லக்குழு ஆர்.பரந் தாமன், இலக்கிய அணி வி.சி.சண்முகம், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ். முகமது யூனூஸ், வர்த்தக ரணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மீன வர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, இலக் கிய அணி பழனிசாமி, டி. வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்ன மணி, இளைஞரணி துணை அமைப்பாளர் மணிகண்ணன், முத்து குமார், குட்டிமணி, பிரபு, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல் வன், வி.எம்.வெற்றிசெல் வன், ப.பிரவின்குமார், உமாபாலன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன் றிய, பேரூர் கழக நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் மேலும் ரூ.450 கோடி முதலீடு!

## டயர் தயாரிப்பு நிறுவனமான ‘சியட்’ அறிவிப்பு!

சென்னை, ஜூலை 19 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு வெளிநாட்டு முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் போட்டி போட்டு கொண்டு முதலீடு கள் செய்து வருகின்றன. இதன் காரணமாக, இந்தி யாவிலேயே தமிழ்நாடு தொழில்துறையில் முதலி டத்தில் திகழ்கிறது.

இந்நிலையில், வாகனங்க ளுக்கான டயர் தயாரிக்கும் முன்னணி நிறுவனமான சியட், தமிழ்நாட்டில் மேலும் முதலீடு செய்வதாக அறி வித்துள்ளது.

அதன்படி, திருப்பெரும் புதூரில் உள்ள தனது ஆலையை 450 கோடி மதிப் பில் விரிவாக்கம் செய்ய உள்ளதாக சியட் டயர் நிறு வனம் தெரிவித்துள்ளது. ஸ்ரீபெரும்புதூர் ஆலையில் ஆண்டுக்கு 70 லட்சம் டயர் கள் உற்பத்தியாகும் நிலை யில், மேலும் அதிகப்படுத்த சியட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சியட் உற்பத்தி ஆலை யின் இந்த விரிவாக்கம் மூலம் தமிழ்நாட்டு இளை ஞர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் 2027 ஆம் ஆண்டுக்குள், கார்களுக் கான உதிரிபாகங்களை அதி கரிக்க திட்டமிட்டுள்ளதாக வும் ‘சியட்’ நிறுவனம் கூறி யுள்ளது.



குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடலூர் நகராட்சி வார்டு 1,2,3 பகுதிகளுக்கான ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் வடலூர் தமிழ்ச்செல்வி திருமணமண்டபத்தில் நடைப்பெற்றது. வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார் துவக்கி வைத்தார். வட்டாட்சியர் விஜய் ஆனந்த், வடலூர் நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் தன.தமிழ்ச்செல்வன் வடலூர் நகர மன்ற துணைத் தலைவர் ஆர்.சுப்புராயலு, நகராட்சி ஆணையர் ரஞ்சிதா, நகராட்சி பொறியாளர் சிவசங்கரன், நகர மன்ற உறுப்பினர்கள் கே.சிவக்குமார் வசந்தகுமாரி வீரமணி, இளவரசன், காவல்துறை அதிகாரிகள், அனைத்து துறை அதிகாரிகள், வார்டு செயலாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.